2016 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

மாணவியர் விடுதி

***54760—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், சாமல்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், சாமல்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, அரசு விதிகளுக்குட்பட்டு கட்ட இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். நமக்கு நாமே என்று போனவர்களுக்கு நாமத்தைப் போட்டுவிட்டு, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் மாண்புமிகு*

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிதான் அமையப்போகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், சாமல்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதியை அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி, மத்தூர் ஊராட்சி ஒன்றியம், சாமல்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 165 மாணவர்களும், 165 மாணவியர்களும் ஆக மொத்தம் 330 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இதில், 55 மாணவிகள் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களில், சுமார் 15 பேர் மட்டுமே 3 கி.மீ. சுற்றளவில் இருந்து வருகிறார்கள். மேலும், ஊத்தங்கரை தொகுதியில் 85 மாணவர்கள் தங்கிப் பயிலும் விடுதி ஒன்றும், 85 மாணவியர்கள் தங்கிப் பயிலும் பள்ளி விடுதி ஒன்றும் உள்ளன. எனவே, எதிர்காலத்தில் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், ஆய்வு செய்து, விதிமுறைகளுக்குட்பட்டு, ஆதி திராவிட மக்களின் பாதுகாவலராக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

88—

வீட்டுமனைப் பட்டா

***37686—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—